Literacy for a Billion

Movie: Mann
Year:

Song: Keezhvaanam
Lyricist:

கீழ்வானம்
சூரியனால் வெளுக்குது
நம்ம குடிசைகளோ
இருளினிலே கிடக்குது
சாமி எல்லாம்
தூங்கிருச்சோ
நீதி எல்லாம்
நீரெழுத்தோ
வாழ்க்கை என்ற படகு
புயல் ஆடியது
வெளிச்சம் என்ற
திசையை தேடி ஓடியது
கீழ்வானம்
சூரியனால் வெளுக்குது
நம்ம குடிசைகளோ
இருளினிலே கிடக்குது
ஆ.....ஆ.....ஆ.....ஆ....
மனமே
கலங்குவது ஏனடா
மனிதம்
தொலைந்து போன ஊரடா
சட்டம்
நூறிருந்து என்னடா
கட்டி
போட்டிருக்கு கையடா
ஆங்கிலேய
நாட்டுக்காரன் தந்த விதி
சங்கியில்
பிணைத்து வந்து
செய்த சதி
ஓ அந்த சாமிக்கும்
காது செவிடோ

கீழ்வானம்
சூரியனால் வெளுக்குது
நம்ம குடிசைகளோ
இருளினிலே கிடக்குது
கூவேலை செய்தோம்
நாளுமே
கூனிப்போனது எங்கள்
மேனியே
கே செய்யுது இந்த
தேசமே
கேட்க நாதி யாரும்
இல்லையே
நாங்கள் என்று
சொல்லுகின்ற
வேளை வரும்
நீயும் நானும்
ஒன்று என்ற
வேதம் தரும்
ஓ அந்த நாள்
வெகு தொலைவில் இல்லை
கீழ்வானம்
சூரியனால் வெளுத்திடும்
அப்போ குடிசை எல்லாம்
வீடுகளாய் மாறிடும்
நீதி எல்லாம்
நிலைத்து நிற்கும்
பேதம் எல்லாம்
கலைந்து நிற்கும்
யாரும் ஒன்றே
என்ற சேதி தேடி வரும்
இல்லை என்ற சொல்
பறந்து ஓடிவிடும்

Literacy for a Billion

கீழ்வானம்
சூரியனால் வெளுத்திடும்
அப்போ குடிசை எல்லாம்
வீடுகளாய் மாறிடும்
ஆ.....ஆ.....ஆ.....ஆ....

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.